Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 25 உ செவ்வாய்க்கிழமை (09-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 216

# புதிய படை அணி அமைக்கும் முயற்சியை அரசு கைவிட்டது!

## பெரும் நிதிப்பற்றாக்குறையே காரணம்

கொழும்பு, ஜூலை 9

**புதிதாக நான்காவது படைப்பிரிவு ஒன்றை அமைக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் திட்டம் புஸ்வாணமாகியது!**

**நிதிப் பற்றாக்குறை காரணமாக இந்தத் திட்டத்தை நிதி அமைச்சு நிராகரித்துவிட்டது என்றும், அதனால் முயற்சி கைவிடப்பட்டதாகவும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்தார்.**

நான்காவது படைப்பிரிவை அமைக்கும் திட்டத்தை இராணுவம் கடந்த ஆண்டு பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பித்திருந்தது.

வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்ள இராணுவத்திற்கு ஆட்பலம் போதாதிருப்பதாகவும், அதனால் புதிய படைப்பிரிவு அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அப்போது தெரிவிக்கப்பட்டது.

நிதி நெருக்கடி காரணமாக அத்திட்டத்தைச் செயற்படுத்துவது அப்போது தள்ளிப் போடப்பட்டது. ஆனால் இப்போது இத்திட்டம் முற்றாகக் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆட்பலம் தற்சமயம் 60 ஆயிரம் ஆகும். இது தற்போதைய நிலையில் போதுமானதாகும் என்று லெப்டினன்ட் ஜெனரல் வனசிங்கா சொன்னார். (உ-எ)

## வரதனின் சடலம் தகனம்

கொழும்பு, ஜூலை 9

கூட்டுப்படை தலைமையக குண்டுவெடிப்பின் சூத்திரதாரி என பொலிஸாரினால் சந்தேகிக்கப்படும் வரதனின் சடலம் அரச செலவில் தகனம் செய்யப்பட்டுள்ளது.

கொட்டகலையில் சயனைட் அருந்தி மரணமான இவரின் சடலத்துக்கு எவரும் உரிமை கோரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## தமிழர் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 9

திருகோணமலை மாவட்டம் சேருவல பகுதியில் இலங்கை துறைமுகம் என்னும் இடத்தை கடந்த சனிக்கிழமை சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய ஸ்ரீலங்காப் படையினர் தமிழ் மகன் ஒருவரைச் சுட்டுக் கொன்றனர்.

மற்றொரு தமிழர் கத்தியால் குத்தப்பட்டு காயப்படுத்தப்பட்டார்.

அந்தப் பகுதியில் 5 தமிழரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## கிளாட்ஸ்ரோன் விவகாரம் ஐ. நாவில் எதிரொலிக்கும்?

ஸ்ரீலங்காவிலிருந்து பிரிட்டிஷ் தூதுவர் திரு. கிளாட்ஸ்ரோன் வெளியேற்றப்பட்ட விவகாரத்தை ஐ. நா. சபைக்கு கொண்டுசெல்ல பிரிட்டிஷ் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியவருகிறது.

இந்த வெளியேற்றத்தை ஐரோப்பிய நாடுகள் ஏற்கனவே கண்டித்துள்ளன என்பது தெரிந்ததே. (உ-3)

## தொண்டர் ஆசிரியர் பேரணி

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி யாழ். நகரில் நேற்றுப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. நூற்றுக்கணக்கான தொண்டர் ஆசிரியர்கள் பேரணியில் கலந்துகொண்டனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியிலிருந்து பேரணி ஆரம்பமாகி யாழ். கல்வி அலுவலகத்தில் முடிவடைந்தது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கல்வி நிர்வாக அலுவலகம், யாழ். செயலகம், கல்வி அலுவலகம் ஆகியவற்றில் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. (ஒ-5)

## கொழும்புக் குண்டுவெடிப்பு: மேலும் சிலர் கைது!

### லொறிச் சாரதி தேடப்படுகிறார்

கொழும்பு, ஜூலை 9

கொழும்பு, கூட்டுப்படைத் தலைமையகக் குண்டுவெடிப்புச் சூத்திரதாரி எனக் கருதப்படும் வரதன் கொட்டகலைக்கு தப்பிச் செல்ல பயன்படுத்திய நீலநிற ''இசுசு எல்வ்'' வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் வைத்து எல்வ் கைப்பற்றப்பட்டது. அதன் உரிமையாளரெனக் கூறப்படும் கொட்டாஞ்சேனை வர்த்தகரும், இரு லொறி கிளீனர்களும் கைது செய்யப்பட்டனர்.

லொறியில் வேலை செய்து வந்த பாபு, சுப்பையா என்ற கிளீனர்களே கைது செய்யப்பட்டவர்கள். பாபு வாழைச்சேனை வாசி. சுப்பையா வல்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுகளை பொருத்தியவர் கந்தானையில் கைதாம்!

குண்டுகளை வாகனங்களில் பொருத்தியவர் எனச் சந்தேகிக்கப்படும் சுவேந்திரன் என்னும் தமிழ் இளைஞரை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தானைப் பகுதியிலுள்ள உஸ்வட்ட கெய்யாவ என்ற இடத்தில் மறைவிடம் ஒன்றில் இருந்து இவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் இரு வாகனங்களில் பொருத்தி தயார் செய்து வைத்திருந்த குண்டுகள், கொழும்பில் அடுத்தடுத்து வெடிக்க வைக்கப்பட இருந்தனவாம்.

இந்த இரு வாகனங்களையும் தேடிக் கண்டுபிடிப்பதில் விசேட பொலிஸ் குழு ஒன்று தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்று பொலிஸ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

## மலையகத் தோட்டங்களில் தீவிர தேடுதல் நடக்கிறது

கொழும்பு, ஜூலை 9

தலவாக்கொல்லை, கொட்டகலையில் வரதன் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவத்தை அடுத்து, மலையகத் தோட்டப் பகுதிகளில் தீவிர தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வரதன் தஞ்சமடைந்திருந்த கிறிஸ்லண்ட்பம் தோட்டம் மற்றும் நோர்வூட் பகுதியிலுள்ள பல தோட்டங்களிலும் சல்லடைப் போட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

கொழும்பில் இருந்து சென்ற விசேட பொலிஸ் குழுவுடன் திம்புல, தலவாக்கொல்லை பொலிஸாரும் இணைந்து இத் தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மலையக நகரப் புறங்களில் வீதிகளில் செல்லும் வாகனங்களும் மறிக்கப்பட்டு, சோதனையிடப்பட்டு வருகின்றன. (ஒ)

## அரசிடம் கனரக ஆயுதங்கள் கேட்கிறது புளொட்!

கொழும்பு, ஜூலை 9

வடக்கு – கிழக்கு பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக விரிவான இராணுவ நடவடிக்கையில் ஈடுபட கனரக இராணுவ ஆயுதங்களைத் தந்துதவும்படி புளொட் இயக்கம் ஜனாதிபதியை இவ்வாரம் சந்தித்து கோரவிருக்கிறது.

இத்தகவலை புளொட்டின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உபதலைவர் கரவை கந்தசாமி தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது. (உ-எ)

## ராஜீவ் கொலைச் சம்பவம்: ஈழத் தமிழரை நேபாளம் நாடு கடத்தியதாக தகவல்

புதுடில்லி, ஜூலை 9

ராஜீவ் கொலைச் சம்பவம் தொடர்பாக ஈழத் தமிழரான சந்தேக நபர் ஒருவரை நேபாளத்திலிருந்து அந்நாட்டு அரசு பலவந்தமாக இந்தியாவுக்கு நாடு கடத்தி, இந்திய அரசிடம் ஒப்படைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு வருடமாக நேபாளத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த இரவீந்திரன் சுவாமிநாதன் [வயது 28] என்ற நபரை ராஜீவ் கொலைச் சம்பவம் தொடர்பாக நேபாள அரசு கைது செய்திருப்பதாக ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' நேற்று மாலை அறிவித்தது.

ஆனால் —

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதம் மற்றும் தங்கத்துடன் மூன்று முஸ்லிம்கள் கைது!

### காத்தான்குடியில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 9

கடந்த புதன்கிழமை காத்தான்குடியில் மூன்று முஸ்லிம் இளைஞர்களை துப்பாக்கிகள், கிரனேட்டுகள் மற்றும் தங்கம் ஆகிய பொருள்களுடன் பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க இத்தகவலை வெளியிட்டார்.

எம்-16 ரக ரைபிள்கள் 2, ரி-84 ரக ரைபிள்கள்-3, ஜி-3 ரைபிள் ஒன்று, சப்மெஷின் துப்பாக்கி ஒன்று, ஷொட்கன் ஒன்று, 600 சுற்றுக்கள் ஆகியன முஸ்லிம் இளைஞர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டன என்றும் ஜெனரல் ரணதுங்க சொன்னார்.

## பெற்றோல் கடத்துவதற்கு இப்படியும் முயற்சியாம்!

கொழும்பு, ஜூலை 9

தெற்கிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பெற்றோல் கடத்திவர எடுக்கப்பட்ட முயற்சியைப் பொலிஸார் முறியடித்திருப்பதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

சிறிய தொழிற்சாலை ஒன்றில் சந்தேகத்துக்கு இடமான முறையில் காணப்பட்ட எண்ணெய் 'பரல்களை' பொலிஸார் சோதனையிட்ட போதே இது கண்டுபிடிக்கப்பட்டதாம்!

மண்ணெண்ணெய் ஏற்றிவரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



இரண்டு பக்கமும் வால் [illegible]

## ராஜீவ் கொலை விசாரணை; ஈழப் பிரமுகர் ஒத்துழைப்பு!

கொழும்பு, ஜூலை 9

ராஜீவ் கொலைச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வரும் விசேட புலனாய்வுக் குழுவுக்கு சென்னையில் தங்கியுள்ள ஈழப்பிரமுகர் ஒருவர் முழு உதவி வழங்கி வருகிறார் என்று சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்னையில் தங்கியிருக்கக்கூடிய ஈழப்போராளிகள் பற்றிய விவரங்கள், அவர்களின் நடமாட்டங்கள், அவர்கள் தங்கியிருக்கக் கூடிய இடங்கள், அவர்களுடன் தொடர்புபட்ட ஆட்கள் போன்ற விவரங்களை இந்த நபர் புலனாய்வுக் குழுவுக்கு வழங்கி வருகிறார்!

சென்னையில் இயங்கிய தமிழ்க் குழுக்களுடன் ஆரம்பம் முதல் இவருக்குத் தொடர்பு இருந்ததால் ஈழப் போராளிகள் பற்றிய விவரங்களைத் திரட்டுவதற்கு ஆளணி மற்றும் வசதிகளை இவர் கொண்டிருப்பதாகவும்—

அவற்றை வைத்துக் கொண்டு விசேஷ புலனாய்வுக் குழுவுக்கு தகவல் தருதல், ஒற்றர் வேலை பார்த்தல் போன்ற முக்கிய செயல்களை

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

க. சுந்தரநடராஜா ஆகிய எனது அடையாள அட்டையும் [561392153V], பேர்சும் 5 - 7 - 91 அன்று ஆலடிக்கும் சங்குப்பிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(17426)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

கொடிகாமம் ரயில்வே நிலையப் பகுதியில் பொதிகள் அடங்கிய பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு கொடிகாமம் வர்த்தகர் சங்கத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களோடு அதனைப் பெற்றுக்கொள்ளலாம். வர்த்தகர் சங்கம், கொடிகாமம்.

(17428)

### "மீரா" நாவல்கள்

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், விஷேட தினங்களில் பரிசளிக்கக் கூடியவை. சிறுவர்களுக்கு 'இராவணன் கோட்டை', இனவிடுதலையை மையமாக சங்கரன், அக்கினி, பள்ளமுடி மன்னர்கள் இன்னும் பத்து நெஞ்சைத் தொடும் நாவல்களும் விற்பனையாகின்றன.

(17427)

### தேவை

முதலாம் ஆண்டு தொடக்கம் ஐந்தாம் ஆண்டு வரை எட்டுப் பிள்ளைகளுக்கு கிழமை நாட்களில் மட்டும் கற்பிக்க தகைமையுடைய ஆசிரியர் தேவை. இல. 118, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4189)

### ரைப்ரைட்டர் சேவை

தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) வாங்கவும், விற்கவும் மற்றும் சிறந்த முறையில் திருத்தவும் தொடர்பு கொள்ளவும்: பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

[சி/0194]

## கிறிஸ்தவ சபை வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 9

மோதல்கள் மற்றும் முன் நிபந்தனைகளைக் கைவிட்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இலங்கை தேசிய கிறிஸ்வ சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை தேசிய கிறிஸ்தவ சபை கொழும்பில் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது.

(த-எ)

---

புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்
(வரையுள்ளது)

கீழே குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. நிபந்தனைகளும், தகைமைகளும்

## பதவி வெற்றிடங்கள்

**(அ) கணக்காளர் தரம் III**

கல்வித் தகைமைகள்: கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

வயது: 23 — 40

சம்பளத் திட்டம்: 1005 — 1705 இதர 40x3 - 50x10 படிகளும்

பிணைரொக்கம்: 2000/-, ஆதனம்: 3000/-

**(ஆ) கணக்குப் பதிவாளர்:**

கல்வித் தகைமைகள்: கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

வயது: 20 — 40

சம்பளத் திட்டம்: 905 — 1605 இதர 40x5 - 50x10 படிகளும்

பிணைரொக்கம்: 2000/-

**(இ) பொது இலிகிதர்:**

கல்வித் தகைமைகள்: கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

சம்பளத் திட்டம்: 730 — 1055 இதர 20x10 - 25x5 படிகளும்

வயது: 18 — 40

பிணைரொக்கம்: 1000/-

**(ஈ) காவலாளி:**

கல்வித் தகைமை: 5ஆம் வகுப்பு சித்தி.

சம்பளத் திட்டம்: 700 — 950 இதர 15x10 - 20x5 படிகளும்

வயது: 18 — 40

பிணைரொக்கம்: 1000/-

விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து 23 - 07 - 1991 க்கு முன் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விவரங்களை சங்கக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்.

புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்,
புங்குடுதீவு.

[சி-0226]

## ஈழத் தமிழரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரா. சுவாமிநாதன் என்ற இந்த ஈழத்தமிழர் நேபாள அரசினால் கைது செய்யப்பட்டு இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டார் என்றும்—

அவருடன் நேபாளத்திலிருந்து புதுடில்லி நோக்கி இந்திய புலனாய்வு அதிகாரிகளும் சென்றனர் என்றும் பி. பி. ஸி அறிவித்தது.

இந்தச் செய்திகளுக்கு மாறாக—

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வரும் சிவராசன் மற்றும் சுபா ஆகியோர் வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்ல உதவியதாக நேபாள அதிகாரிகளால் சந்தேகிக்கப்படும் ஈழத் தமிழரான கே. தியாகராஜன் என்பவர் நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் இருந்து புதுடில்லி வந்து விட்டார் என்று பி. ரி. ஐ. செய்திஸ்தாபனம் தெரிவித்தது.

இவரைத் தாம் கைது செய்யவில்லை என்றும்—

இது பற்றித் தமக்கு ஏதும் தெரியாதென்றும் நேபாள அதிகாரிகள் கூறினர் என்றும் பி. ரி. ஐ தெரிவித்தது.

[உ-எ-35]

## ராஜீவ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர் மேற்பார்வை செய்து ஒழுங்குபடுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

ராஜீவ் கொலை தொடர்பாக ஈழப்போராளி அமைப்பு ஒன்றின் மீது குற்றஞ் சுமத்தி சென்னைப் பத்திரிகைகள், வார இதழ்கள் ஆகியவற்றுக்கும் இவர் தகவல் கொடுத்து வருகிறார்.

இவரது பெயர் குறிப்பிடாமல் 'ஈழப்பிரமுகர் தகவல்' என்ற பாணியில் 'ஜூனியர் விகடன்' வார இதழ் உட்பட பல பத்திரிகைகள் பழைய சம்பவங்களை மேற்கோள்காட்டி பல செய்திகளைப் பிரசுரித்து வருகின்றன.

தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகள் அமைப்புகளின் பிரதிநிதியாகச் செயற்பட்டு வந்த இந்த நபர் ஒரு சட்டத்தரணி. இவர் ஈழத்தில் பிரபல்யம் வாய்ந்த, மறைந்த அரசியல் தலைவரின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## கொழும்புக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டித்துறை வாசி.

இந்த லொறியின் சாரதியைத் தேடி பொலீஸார் மலையகப் பகுதியில் வலை விரித்துள்ளனர். இவர் காரைநகர் வாசியான குகேந்திரன் என்று சந்தேகிக்கப்படுகிறது.

கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்புத் தொடர்பாக இதுவரை பெண்கள் சிலர் உட்பட 30 பேருக்கு மேற்பட்டோர் கைதுசெய்யப் பட்டுள்ளனர் என்றும் —

வரதனின் நெருங்கிய சகாவான ரவியும் சில தினங்களில் கைது செய்யப்பட்டு விடுவார் என்றும் பொலீஸார் நம்பிக்கை தெரிவித்தனர்.

வரதன் தமது தேவைகளுக்காகப் பாவித்த மற்றொரு வாகனம் பற்றியும் துப்புக் கிடைத்துள்ளதாகப் பொலீஸார் கூறினர்.

[ஓ]

## ஓராண்டு நினைவஞ்சலி

### அப்புக்குட்டி சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபரும், முன்னாள் சாவகச்சேரி கிராமசபைத் தலைவரும், சமாதான நீதிவானும்)

தோற்றம்: 11 — 02 — 1905

மறைவு: 09 — 07 — 1990

எங்கள் அன்புக்கும், மதிப்பிற்கும் உரிய எமது குடும்பத் தலைவருக்கு

● **எமது கண்ணீர் அஞ்சலி** ●

மக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

பொலீஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி.

(17423)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் வீரவாகு யோகநாதன்

(கிளை முகாமையாளர், வவுனியா தெற்கு, தமிழ்ப் பிரிவு)

உதயம்: 1954 - 04 - 06

அஸ்தமனம்: 1990 - 07 - 09

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உமது பிரிவால் துன்புறும்:
மனைவி, மக்கள், அம்மா,
உற்றார், உறவினர்கள்.

''வீரவாகு இல்லம்''
குடியிருப்பு, வவுனியா.

(4190)

## யூகோ. பிரச்சினையில் சமரசம்

பெல்கிறேட், ஜூலை 9

யூகோஸ்லேவிய சமஷ்டி அரசுக்கும் குரோஷியா மற்றும் ஸ்லோவேனியா ஆகிய மாநிலக் குடியரசுகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியில் மத்தியஸ்தம் செய்ய ஐரோப்பிய சமூக அமைப்பு நாடுகள் மேற்கொண்ட முயற்சி வெற்றி கண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கம்மா சுப்பிரமணியம்

கைதடி தெற்கு, கைதடியைச் சேர்ந்த திருமதி தங்கம்மா சுப்பிரமணியம் (7-7-1991)ஞாயிற்றுக்கிழமை இரவு சிவபதமடைந்தார். அன்னார் திரு. பொன்னைபா சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சரோஜினிதேவி வேலுப்பிள்ளை, கோடீஸ்வரன் (தபாலதிபர், நெடுங்கேணி), யோகீஸ்வரன் (டுபாய்) செல்வராசா (கிராமசேவையாளர், கைதடி வடக்கு), திருமதி மகேஸ்வரி நாகேந்திரன், திருமதி கமலாஜினிதேவி சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. க. வேலுப்பிள்ளை (உதவி அரசாங்க அதிபர், கிளிநொச்சி), திரு. சு நாகேந்திரம் (அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபன தலைமை அலுவலகம், கொழும்பு). திரு. கு சுப்பிரமணியம் R.V.G. பிடிஸ்தாபனம், யாழ்ப்பாணம்) திருமதி அனுஷியா கோடீஸ்வரன், (ஆசிரியை, யாழ்/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்) திருமதி ராஜினி யோகீஸ்வரன் [டுபாய்], திருமதி யோகீஸ்வரி செல்வராசா [சமநல சேவை நிலையம், கைதடி] ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (9-7-1991) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக கைதடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
சு. கோடீஸ்வரன்
[மகன், தபாலதிபர்]

கைதடி தெற்கு,
கைதடி.

[17429]

## வேலுப்பிள்ளை சபாரத்தினம்

வே. சபாரத்தினம் (முன்னாள் கதிர்காமம் இராமகிருஷ்ணன் மிசன் மடத்தில் கடமையாற்றியவர்) காலமானார். இவர் காலஞ்சென்ற களபூமி காரைநகரைச் சேர்ந்த மலேயன் பென்சனியர் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை, சிதம்பரம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரரும், திருமதி மங்கையர்க்கரசி (இங்கிலாந்து), திருமதி தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலாநிதி க. சந்திரு (இங்கிலாந்து), க. விஸ்வலிங்கம் (இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (9-7-91) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. விஸ்வலிங்கம்

374, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(17264)

## செல்வி மங்களேஸ்வரி சிவகுரு

செல்வி மங்களேஸ்வரி சிவகுரு 08 - 07 - 91 அன்று காலமானார்.

அன்னார் அனலைதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னப்பு சிவகுரு - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், விநாயகமூர்த்தி, சிவனேஸ்வரி, ஞானாம்பாள், இராசரெத்தினம், நாவுக்கரசன், யோகேஸ்வரி, செந்தமிழ்க்கரசன், எழில்வண்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி, நடராசா, சின்னராசா, இந்திரன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

தகவல்:
பா. மனோகரன்

3/1, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

[17265]

## ஏபிரகாம் ஐசக் நேரியோ (ராஜகுமார்)

பாஷையூரைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் ச. ஏபிரகாம் (ஆரம்), பிலமினா தம்பதிகளின் மூத்த புதல்வன் ஐசக் நேரியோ (ராஜகுமார்) 30-6-91அன்று கொழும்பில் காலமானார்.

இவர் திருமதி மெற்றில்டாவின் அன்புக் கணவரும், Rev. Fr. H N. ஏபிரகாம் (கண்டி), திருமதி செபஸ்ரியாம்பிள்ளை சகாயரோஸ், பசில் நேரியோ, சில்வறின் சுமதி, நொவல் நேரியோ, தொயலின், ஆன்சலம் நேரியோ, மக்டொனால்ட் நேரியோ ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு: எம். செபஸ்ரியாம்பிள்ளையின் மைத்துனரும், நிஷாந்தி, வரோணிக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கண்டியில் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை அறியத்தருகிறோம். இவரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 10-7-91 அன்று காலை 6-15 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல்:
உறவினர்.

சென் அன்ரனீஸ் வீதி,
பாஷையூர்.

(17263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நிபந்தனையின் அர்த்தம் இதுவே

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு, அடுத்த படியில் அதிகாரம் உள்ளவர் எனக் கருதப்படுபவர் அவரின் ஆலோசகரான பிரட்மன் வீரக்கோன்.

தமிழர் பிரச்சினை சம்பந்தமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு அவர் புதிதாக ஒரு நிபந்தனையை விதித்திருக்கிறார்.

வருங்காலத்தில் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதானாலும், அதற்கு முன்னர், "அரசியல் நோக்கங்களை எட்டுவதற்கு, வன்முறையை ஒரு வழிமுறையாகப் பயன்படுத்தமாட்டோம்" என்று விடுதலைப் புலிகள் அறிவித்தாக வேண்டும் என்பதே அந்த நிபந்தனை.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தாம் தயார் என்று விடுதலைப் புலிகள் அறிவித்ததில் இருந்து, அரசாங்கம் பல நிபந்தனைகளை விதிப்பதும் பின்னர் தளர்த்துவதுமாக இருக்கிறது.

ஆயுதங்களைக் கீழே போட்டால் தான் பேச்சுவார்த்தை என்ற ஆரம்ப நிபந்தனை, ஆயுதங்களை கீழே வைப்பதாக அறிவித்தால் போதுமானது என்று பின்னர் மாற்றப்பட்டது. ஏனைய தமிழ்க் குழுக்களுடனும் அரசு பேசியே பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்ற நிபந்தனை உத்தியோகபூர்வ அறிவிப்பு இல்லாமலே மெதுவாகக் கைவிடப்பட்டது.

இப்போது புதிதாக முன் சொன்ன நிபந்தனை முளைத்திருக்கிறது.

பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை விதிப்பதும், கைவிடுவதும் அல்லது மாற்றுவதுமாக அரசாங்கம் ஆறு மாதங்களை ஒரு விதமாகக் கழித்து விட்டது, இதே விதமாக, தனக்குச் சாதகமான, அதாவது தான் நினைத்ததைச் செய்வதற்கு ஏற்றதான காலம் கனியும் வரை அரசு இந்தத் தந்திரத்தையே கையாளப்போகிறது!

அரசு இவ்வாறு தந்திரமாகக் காலத்தைக் கழித்துக் கொண்டு, பேச்சுவார்த்தைக்கான கதவுகள் எப்போதும் திறக்கப்பட்டே இருப்பதாகவும் வேறு கச்சிதமாகச் சொல்லிக் கொள்கிறது!

தமிழர் பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கான தாராள மனப்பான்மையும், விருப்பமும் உண்டு என்று வெளி உலகத்துக்குக் காட்டிக் கொள்வதற்காகவே அரசாங்கம் இந்தத் தந்திரத்தைக் கையாண்டு வருகிறது. வெளி உலகத்துக்கு நல்ல பிள்ளையாக நடித்து, தான் பெறவேண்டியவற்றைப் பெறும் திட்டமிது

உலகத்துக்கு நல்ல பிள்ளையாகவும், அப்பாவியாகவும், சமாதான விரும்பியாகவும், தாராள மனம் கொண்டதாகவும் காட்டிக் கொண்டு காலத்தைத் தன் பக்கம் வாங்குவது.

அவ்வாறு வாங்கப்படும் காலத்தை, இராணுவ வழியாலும், நெருக்குதல்கள் நெருக்கடிகளைக் கொடுப்பதன் மூலம் உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தும் வழியாலும், தமிழர்களின் உரிமைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதற்குப் பயன்படுத்துவதே அரசின் உள்ளார்ந்த நோக்கம்.

தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தில் சலிப்படையும் வரையும், தளர்வடையும் வரையும். இந்த நாட்கடத்தும் யுக்தியைக் கையாளவும் அரசு திட்டமிட்டிருக்கலாம்

ஆனால் தமிழ் மக்கள் அவ்வாறு சலிப்படையவோ, தளர்வுறவோ மாட்டார்கள் என்பதால், அரசின் எண்ணம் ஈடேறுவது கடினம்.

# ஈ. பி. ஆர். எல். எவ் - ரெலோ

# ஈழ அகதி முகாமில் மோதல்

## பொலிஸார் மீதும் தாக்குதல்

சென்னை ஜூலை 9

திருச்சி கொட்டப்பட்டு ஈழ அகதிகள் முகாமில் தங்கி உள்ள ஈ. பி. ஆர். எல். எவ்., ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு இடையே கடந்த வாரம் பெரும் மோதல், கைகலப்பு இடம்பெற்றன. பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த மோதல் சம்பவம் தொடர்பாக 8 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

சீட்டு விளையாடிக்கொண்டிருந்த இருதரப்பாருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதமே கோஷ்டி மோதலாக உருவெடுத்தது என்று தெரிய வருகிறது.

இரு தரப்பினரும் திரண்டு நின்று கற்களை வீசி பெரும் மோதலில் ஈடுபட்டனர் என்றும்—

அங்கு அமைதியை ஏற்படுத்த விரைந்து சென்ற தமிழக விசேஷ பொலிஸ் பிரிவும் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் கூறப்பட்டது. கல்வீச்சில் இரு பொலிஸார் படுகாயம் அடைந்தனர். மற்றொரு கான்ஸ்டபிள் மீது ஓர் இளைஞர் பாய்ந்து கையைக் கடித்ததில், அவர் கையில் காயமடைந்தார்.

இதனையடுத்து பெரும் எண்ணிக்கையான பொலிஸார் திடீரென முகாமினுள் புகுந்து நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஜோசின் [வயது 26], நகுலன் [வயது 20], சசீந்திரன் [வயது 24], பாலகணேசன் [வயது 25], பரமேசுவரன் [வயது 24], நாதன் [வயது 25], கமலநாதன் [வயது 26], சேகர் [வயது 25] ஆகியோர் கைதுசெய்யப்பட்டு திருச்சி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து கொட்டப்பட்டு அகதி முகாமைச் சுற்றி பொலிஸ் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது. [உ]

### விசேஷ குழுக்கள்

கொழும்பு மாநகரில் நடமாடும் புதியவர்களைக் கண்டுபிடிக்க விசேஷ குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

# தமிழகப் பொலீஸில் புலிகள் ஊடுருவல்!

## வாழப்பாடி குற்றச்சாட்டு

இரண்டாண்டு காலம் தமிழகத்தில் இடம்பெற்ற தி. மு. க. ஆட்சியில் 'கியூ' பிரிவு பொலிஸ் உட்பட அனைத்துத் துறையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஊடுருவி விட்டனர்.

மத்திய தொழிலாளர் இணை அமைச்சரும், தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவருமான வாழப்பாடி இராமமூர்த்தி அண்மையில் சேலத்தில் நடந்த செய்தியாளர் கூட்டத்தில் இப்படிக் கூறினார்.

இந்தியாவில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப அந்த நாட்டு அரசுடன் இந்தியா உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். [உ]

# புலிகளுக்கு எதிராக தமிழகத்தில் கூட்டுத்திட்டம்!

சென்னை, ஜூலை 9

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை எதிர்க்க மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து கூட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்க முடிவு செய்துள்ளன.

அண்மையில் புதுடில்லியில் தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண்சிங் பிரதமர் பி. வி. நரசிம்மராவைச் சந்தித்துப் பேசிய போது இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

கூட்டு நடவடிக்கை எடுப்பது குறித்து தமிழக முதல்வருடன் மத்திய அரசு தொடர்பு கொள்ளும் என்றும் இச்சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்டது.

பிரதமரைச் சந்தித்த பின்னர், கூட்டுத் திட்டம் தயாரிப்பது குறித்து ஆளுநர் பீஷ்ம நாராயண்சிங் மத்திய உள்துறை அமைச்சர் சவானைச் சந்தித்து விரிவாகப் பேசினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ]

# இலங்கைத் தமிழர்கள் ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம்

பேர்லின், ஜூலை 9

ஜேர்மனியில் அடைக்கலம் புகுந்துள்ள 20 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்களை அங்கிருந்து பலவந்தமாகத் திருப்பி அனுப்ப ஜேர்மன் அரசாங்கம் எடுத்த முடிவை எதிர்த்து அங்கு வாழும் தமிழர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை கடந்த முதலாம் திகதி நடத்தினர்.

ஆயிரத்துக்கும் அதிகமானோர் இப் பேரணியில் கலந்து கொண்டனர். தாங்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டால் அங்கேயே தற்கொலை செய்துகொள்ளப் போவதாக அவர்கள் கோஷமிட்டனர்.

தாம் இலங்கைக்கு அனுப்பப்பட்டால் அங்கு இலங்கை அரசால் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் வசடும் அபாயம் உண்டு என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இப் பேரணியின் முடிவில் விரிவான மகஜர் ஒன்று ஜேர்மன் வெளிநாட்டமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், எனவே தமது உயிருக்கு உத்தரவாதமில்லாததால் தாம் இலங்கைக்கு செல்ல முடியாது என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து ஜேர்மன் அரசாங்கம் இலங்கைத் தமிழர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கான காலக்கெடுவை டிசம்பர் 31 வரை பின்போடப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் அடைக்கலம் கோரியுள்ள 20,000 தமிழர்கள் உட்பட 1½ லட்சம் வெளிநாட்டு அகதிகளை ஜூன் மாத இறுதியில் வெளியேற்ற ஜேர்மன் அரசாங்கம் முடிவு செய்திருந்தது தெரிந்ததே. [உ]

## இலவச கணித விஞ்ஞான வகுப்புகள்

தாளையடி, ஜூலை 9

யாழ் பல்கலைக்கழக கல்வி மறுமலர்ச்சிக் கழகம் வடமராட்சி கிழக்கு மாணவர்களின் நன்மை கருதி கணித, விஞ்ஞான வகுப்புக்களை நடத்தி வருகின்றது.

பிரதி சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் வெற்றிலைக்கேணி, உடுத்துறை ஆகிய இடங்களில் இவ்வகுப்புகள் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றன. [த-144]

## கிராமசேவகர்களின்

# உள்ளக இடமாற்றங்கள் இம் மாதத்திலிருந்து அமுல்

கொழும்புத்துறை, ஜூலை 9

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கிராம சேவை அலுவலகர்களின் உள்ளக இடமாற்றங்கள் இம் மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ளன

இது சம்பந்தமான சுற்று நிருபம் இடம்மாற்றம் பெற்ற 54 கிராமசேவை அலுவலகங்களுக்கும், பிராந்திய உதவி அரச அதிபர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இடமாற்றம் பெற்ற கிராம சேவை அலுவலகர்கள் இம் மாதத்திலிருந்து தமது புதிய பிரிவுகளுக்குச் சென்று கடமைகளைப் பொறுப்பேற்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (த-30)

# சோனியா வீட்டுக்கு அதிருப்தியாளர் படைஎடுப்பு

## காங்கிரஸுக்குள் இழுபறி

புதுடில்லி, ஜூலை 9

புதிய இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவின் நடவடிக்கைகளில் அதிருப்தியுற்ற பல இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள் ராஜீவ்காந்தியின் மனைவியான சோனியா காந்தியின் வீட்டுக்கு படை எடுக்கத் தொடங்கியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

ராஜீவ்காந்தியின் விசுவாசிகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு கட்சி மாறிகளுக்கு அமைச்சர் பதவி அளித்துவிட்டனர் என்று அவர்கள் சோனியா காந்தியிடம் புகார் தெரிவித்து வருகின்றனராம்.

மத்திய அமைச்சர்களான சரத்பவார், ரங்கராஜன், குமாரமங்கலம், எஸ். கிருஷ்ண குமார் மற்றும் பதவி விலகும் நாடாளுமன்ற சபாநாயகர் ரபிராய், எம். பிக்களான ஏ. ஆர். அந்துலே, எம்.எம். ஜேக்கப் நாராயணசாமி, கர்நாடக முன்னாள் முதல்வர் ஆகியோர் உட்பட பலர் சோனியாவைச் சந்தித்து இவ்வாறு புகார் கூறியிருக்கின்றனர்.

இத்தகைய புகார்கள் குறித்து தாம் கவனிப்பதாக சோனியா காந்தி அவர்களிடம் தெரிவித்தார் என்று கூறப்படுகிறது.

காங்கிரஸ் மற்றும் அரசு நடவடிக்கைகளில் சோனியா காந்தி அக்கறை காட்டத் தொடங்கியிருப்பதாகவும்—

இதனால் தினசரி பெரும் எண்ணிக்கையான காங்கிரஸ் பிரமுகர்கள் அவரது வீட்டுக்கு படை எடுத்த வண்ணம் இருப்பதாகவும் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (உ)

# "ஏ. கே. 47" ஐ விட சக்தி வாய்ந்த துப்பாக்கி

## 'ஈசாப்பூர்-91' இந்தியாவில் உற்பத்தி

"ஏ. கே. 47" ரக வெளிநாட்டுத் துப்பாக்கிகளை விட அதிக சக்திவாய்ந்த துப்பாக்கிகள் இந்தியப்படைக்கல தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன. அவற்றுக்கு 'ஈசாப்பூர்-91' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது இத்துப்பாக்கிகள் மத்திய ரிசர்வ் பொலிஸ் படைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்தியப் படைக்கல வாரியத் தலைவர் பண்டார்கர் அண்மையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தியாவில் 39 படைக்கலத் தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றில் 19 பழமையானவை. அவற்றை நவீனமயப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் சென்னை, குன்னூர், அரவங்காடு ஆகிய இடங்களில் இத்தகைய தொழிற்சாலைகள் இயங்குகின்றன.

இந்தியாவில் தீவிரவாதிகளை அடக்குவதற்காக பொலிஸாருக்கு குண்டு துளைக்காத ["புல்லட் புரூவ்"] கார்களை வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்தத் தொழிற்சாலைகளிலேயே இக்கார்களும் தயாரிக்கப்படும்.

— இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ)

# வீரமணியின் வீடு சோதனை; ஆயுதங்கள் பிடிபட்டன?

சென்னை, ஜூலை 9

ராஜீவ் கொலைச் சம்பவம் தொடர்பாக சென்னை குளைமேடு கங்கையம்மன் தெருவில் உள்ள — திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் வீரமணியின் வீடு — அண்மையில் சோதனையிடப்பட்டது.

மத்திய புலனாய்வுப் படையின் சிறப்பு புலன்விசாரணைக்குழு நடத்திய இந்தத் தேடுதலின் போது ஈழப் போராளிகளுடன் தொடர்பு பட்ட ஏராளமான வீடியோ கசெட்டுகள் மற்றும் ஏ. கே. 47 ரஷ்ய துப்பாக்கிகள் ஆகியவை சிக்கியதாகவும் —

அந்த வீட்டில் காணப்பட்ட — ஒட்டுக் கேட்கும் நவீன எலக்ட்ரோனிக் சாதனங்களைப் பார்த்து புலனாய்வுக் குழுவினர் அசந்து போனதாகவும் சென்னைப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில் பயணிகளுக்கு இப்படி ஓர் எச்சரிக்கை!

ரயிலில் பயணம் செய்யும் போது அறிமுகம் இல்லாத நபர்கள் ஏதாவது குளிர்பானம் அல்லது இனிப்புத் தந்தால் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டாம்.

இப்படி வவுனியா — கொழும்பு ரயில் பயணிகளை ரயில்வேப் பகுதி எச்சரித்துள்ளது.

இது தொடர்பான சுவரொட்டியும் வவுனியா ரயில் நிலையத்தில் ரயில்வேப் பகுதி அதிகாரிகளால் ஒட்டப்பட்டுள்ளது.

ரயிலில் பயணம் செய்யும் போது, நண்பர்கள் போல் பழகும் ஒரு கோஷ்டி மயக்க மருந்து கலந்த குளிர்பானம், இனிப்பு வகைகளை வழங்கி அவர்கள் மயக்கம் அடைந்ததும் அவர்களிடமிருந்து நகைகள், ரொக்கப்பணம் போன்ற பெறுமதி வாய்ந்த பொருள்களை அபகரித்துச் செல்கின்றதாம். (இ)

## இணற்றில் தவறி விழுந்து வயோதிப மாது மரணம்!

### பேரக் குழந்தை தப்பி விட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 9

பேரக் குழந்தையை தூக்கிக் கொண்டு சென்றபோது வீட்டு வளவில் உள்ள கிணற்றில் தவறி விழுந்ததாகக் கூறப்படும் சம்பவத்தில், வயோதிப மாது மரணமானார்.

நேற்று முன்தினம் திருநகரில் இச் சம்பவம் நடந்தது.

கிணற்றில் விழுந்து படுகாயமடைந்த நிலையில் வயோதிப மாதும், பேரக் குழந்தையும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். அங்கு வைத்தே வயோதிப மாது உயிரிழந்தார்.

கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த நவமணி சிவகுரு [65 வயது] என்பவரே மரணமானவர் ஆவார்.

நடேசன் சண்முகா (வயது 3) அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் (ஒ-15)

## அகதிகள் வெளிநாடு செல்ல இந்தியா உதவ வேண்டும்

### ராஜ்டம் ஜனார்த்தனம் கோரிக்கை

புதுடில்லி, ஜூலை 9

தற்போது இந்தியாவில் தங்கியுள்ள தமிழ் அகதிகளில் சில தரத்தினர் இலங்கை செல்லாது வெளிநாடு செல்ல விரும்பும் பட்சத்தில் அவர்கள் இந்தியாவில் இருந்து நேரடியாகவே வெளிநாடு செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கூடாது

உலக தமிழ் இளைஞர் சம்மேளனத் தலைவர் டாக்டர் ஜனார்த்தனம் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவுக்கு மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினையை அனுதாபத்துடன் அணுகுமாறும் அவர் நரசிம்மராவைக் கோரி உள்ளார் [இ]

## கொழும்பு பாபர் வீதியில் தமிழ் முகவர் கைது!

தமிழ் இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வந்த தமிழரான முகவர் ஒருவர் கொழும்பு பாபர் வீதியில் உள்ள விடுதி ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டார்

இவர் கைதான சமயம் இவரிடம் 6 லட்சம் ரூபா இருந்தது என்று பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பிரதிப் பொலீஸ்மா அதிபர் பி. உடுகம்பொல தலைமையிலான பொலீஸ் கோஷ்டியினரே இவரைக் கைது செய்தனர்

வெளிநாடு செல்வதற்காக பிஸ்கட் வீதியில் தங்கி இருந்த தமிழ் இளைஞர் ஒருவரிடம் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வந்த சமயம் இவர் கைதானார் (இ)

## வவுனியா வர்த்தகரிடம் ராகமவில் கொள்ளை!

கொழும்பு. ஜூலை 9

கொழும்புக்கு ரயிலில் சென்று கொண்டிருந்த வவுனியாவைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர், ராகம ரயில் நிலையத்தில் வைத்து பலாத்காரமாக இறக்கப்பட்டு, அவரிடம் இருந்த ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பணம் கொள்ளையிடப்பட்டது.

சம்பந்தப்பட்ட வர்த்தகர் வவுனியாவில் மதுபான வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

## 25 தொன் இந்தியத் தங்கம் இங்கிலாந்து வங்கியில்!

புதுடில்லி, ஜூலை 9

இந்தியன் ரிசர்வ் வங்கி 25 தொன் தங்கத்தை நாட்டிற்கு வெளியே எடுத்துச் சென்று இங்கிலாந்து வங்கியில் வைத்திருக்கிறது.

நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடியைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தும் நோக்கில் அத்தங்கம் இரண்டு விமானங்களில் எடுத்துச் செல்லப்பட்டு இங்கிலாந்து வங்கியில் வைக்கப்பட்டிருப்பதாக இந்தியன் ரிசர்வ் வங்கித் தலைவர் வெங்கடராமன் தெரிவித்தார். (ஊ-எ)

# ஒரேநேரத்தில் பல குண்டுகளை வெடிக்க வைக்கத் திட்டமாம்!

கொழும்பு, ஜூலை 9

கொழும்பு நகரில் ஒரே நேரத்தில் பல குண்டுகளை வெடிக்கச் செய்து பெரும் நாசத்தையும் குழப்பத்தையும் விளைவிக்கத் திட்டமிடப்பட்டிருந்ததாம்.

பிளவர் வீதி கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்புக் குறித்து நடத்தப்பட்டு வரும் விசாரணைகள், புலனாய்வுகள் மூலம் இது தெரியவந்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்துள்ளன.

சயனைட் அருந்தி மரணமான வரதன் ஒரு வாகன ஏஜென்சியை நடத்துவது போலக் காட்டிக் கொண்டு பல வாகனங்களை வாங்கியிருப்பதாகவும், பல புறநகரங்களில் பல வீடுகளை வாடகைக்கு எடுத்து தமது குண்டு தயாரித்தல் வேலைகளை இரகசியமாகச் செய்து வந்தார் என்றும் விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாம்.

வரதன் பாவித்த இரண்டு லொறிகள், மோட்டார் சைக்கிள் ஒன்று என்பன கைப்பற்றப்பட்டுள்ளனவாம். குண்டு வைத்தபின்னர் அவர் தெஹிவளையில் இருந்து கொட்டகலைக்குத் தப்பிச் செல்லப் பயன்படுத்திய ''எல்வ்'' வாகனமும் அதில் ஒன்று எனவும் கூறப்பட்டது. அந்த வாகனம் குளிர்பானம் ஏற்றி இறக்கும் வாகனம் போல மாற்றி அமைக்கப்பட்டிருந்ததாகவும், உள்ளே இரண்டு பிஸ்டல்கள் பொருத்தப்பட்டிருந்ததாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

வரதன் தெஹிவளையில் தங்கியிருந்த வீடும் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டதாகவும், ஒரு பெண் மூலமே வரதன் கொட்டகலைக்குச் சென்ற தகவல் தெரிய வந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## சாரம் அணிந்து வந்த மேயர்!

கொழும்பு, ஜூலை 9

இரத்தினபுரி மாநகரசபையின் புதிய மேயராகி அண்மையில் பதவியேற்ற திரு. மகிந்த ரட்ணதிலக பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டபோது நிற சாரம் அணிந்து வந்து அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தினார்.

இந்த நாட்டின் வரலாற்றில் மேயர் ஒருவர் சாரம் அணிந்து சபைக்கு வந்தது இதுவே முதல் முறையாகும். (த)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

திருகோணமலை மாவட்டம் கட்டைபறிச்சான் பகுதியில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் ஒன்றில் லெப்டினன்ட் நிமால் (பொன்னையா புலேந்திரன் — திருகோணமலை) வீரமரணமடைந்தார் (ஒ-3)

## அத்வானி எதிர்க்கட்சி தலைவர்!

புதுடில்லி, ஜூலை 9

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் திரு. எல். கே. அத்வானி புதிய லோகசபையின் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவராகின்றார்.

லோகசபைச் செயலகம் நேற்று இதனை அறிவித்தது.

பாரதீய ஜனதாகட்சியின் 117 எம். பிக்கள் புதிய லோகசபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. (ஒ-எ)

## மக்கள் வங்கிக்கு பணம் வந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 9

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள ''லில்லி லில்லி'' கப்பலில் மக்கள் வங்கிக்கு மூன்று கோடி 50லட்சம் ரூபா பணம் எடுத்து வரப்பட்டுள்ளது. (ஒ-3)

## தடகள போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 9

திலீபன் நினைவு தடகள (மெய்வல்லுநர்) விளையாட்டு விழாவுக்கான விண்ணப்ப முடிவு திகதி நாளை (புதன்) ஆகும்

இதனால் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து, உடனடியாக ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது

வட்டலவைமட்ட போட்டித் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## வெளியூர் தபால் இன்று நகரில் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். நகரப் பகுதிக்கான வெளியூர் தபால் விநியோகம் இன்று நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் பருத்தித்துறை வந்தடைந்த 'லில்லி லில்லி' கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர் [illegible] எடுத்து வரப்பட்டிருந்தன (ஒ-5)

## காரைநகரில் இறப்போர் வளவுகளிலேயே அடக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

காரைநகரில் இறப்பவர்கள் அவரவர் வளவுகளிலேயே உறவினர்களால் அடக்கம் செய்யப்படுகின்றனர்.

மயானத்துக்கு சடலங்களை எடுத்துச் செல்வதற்கு படையினர் அனுமதிக்கிறார்கள் இல்லையாம்.

சமீபத்தில் காரைநகர் கதிர்காம சுவாமி கோவிலடியைச் சேர்ந்த பாக்கியம் என்ற 60 வயதுப் பெண் நெஞ்சுவலியால் மரணமானார். தமது குசினியை கிடுகால் வேய்ந்து கொண்டிருந்த போது அவருக்கு திடீர் என நெஞ்சுக்குத்து ஏற்பட்டது

அவரது சடலத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்ல உறவினர்கள் மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை. இறுதியில் அவரது வீட்டு வளவுக்குள்ளேயே சடலம் அடக்கம் செய்யப்பட்டது. [இ-100]

## முஸ்லிம் வியாபாரி சுட்டுக் கொலை

கொழும்பு, ஜூலை 9

சம்மாந்துறைப் பகுதியில் முஸ்லிம் வியாபாரி ஒருவர், ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

மீராலெப்பை மொகிதீன் அப்துல்மஜீத் (55 வயது) என்பவரே கொலையுண்டவர் ஆவார். (ஒ)

## அம்புலன்ஸ் விபத்தில் ஒருவர் மரணம்

தென்மராட்சி, ஜூலை 9

ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் வெடித்ததில் படுகாயமடைந்தவரையும், பாம்பு கடித்தவரையும் ஏற்றி வந்த அம்புலன்ஸ் வாகனம் ஒன்று மரத்துடன் மோதியதால் அதில் பயணம் செய்த படுகாயமடைந்தவர் அதே இடத்தில் பலியானார். சாரதி உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு இயக்கச்சியில் இடம்பெற்றது

காயமடைந்த அனைவரும் வேறு வாகனத்தில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குகொண்டு வரப்பட்டு அங்கிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். [இ-117]

## பெற்றோல்...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரல்களின் உள்ளே பெற்றோலைக் கடத்திவர செதியாக சிறிய பரல்கள் அமைக்கப்பட்டிருந்ததைப் பொலீஸார் கண்டுபிடித்ததாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ)

## திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு வடமராட்சிக் கல்விக் கோட்ட உபவள நிலையத் திறப்பு விழா 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப 9-30 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலையில் நடைபெறும். (த)

## பயங்கரவாத நடவடிக்கையில் தொடர்பில்லை

கொழும்பு, ஜூலை 9

வெடிமருந்துப் பொருள்களை வைத்திருந்ததாக நீர்கொழும்பில் கைதான வர்த்தகருக்கும் மற்றும் மூவருக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளில் எந்தவித தொடர்பும் இல்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட வர்த்தகர் கறுப்புச் சந்தையில் வெடிமருந்துகளை விற்றுவந்தவர் என்றும், பெரும்பாலும் பட்டாசு உற்பத்தியாளர்களுக்கே அவர் வெடிமருந்துகளை விற்பனை செய்தார் என்றும் ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. (த)

## வதந்தி பரப்பிய இருவர்

தென்மராட்சி, ஜூலை 9

வதந்தி பரப்பியவர்கள் வாயில் பிளாஸ்ரி ஒட்டப்பட்டு கம்பத்துடன் காலை முதல் மாலை வரை நிறுத்தப்பட்டனர்.

இச் சம்பவம் கடந்த 4 ஆம் திகதி பளைச் சந்தைப் பகுதியிலும், மருதங்கேணிச் சந்தியிலும் இடம்பெற்றது.

பளைச் சந்தைப் பகுதியில் ஒருவரும், மருதங்கேணிச் சந்தியில் ஒருவருமே கட்டப்பட்டிருந்தனர்.

இந்த வதந்தியினால் மருதங்கேணி, மாசார் புதுக்காடு பளை ஆகிய பகுதி மக்கள் சிலர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியமை குறிப்பிடத்தக்கது- (இ-117)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/[illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09 - 07 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org